### அபுதாபியில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற

# குவைத் வாழ் தமிழ் மாணவனுக்குப் பாராட்டு விழா!

## சிதம்பரம் ந. தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது!





குவைத், செப்.13-

அபுதாபியில் நடைபெற்ற சதுரங்கப் போட்டிகளில் பல சாதனைகள் படைத்து வெள்ளி மற்றும் தங்கப் பதக்கங்கள் பெற்ற "குவைத் வாழ் தமிழ் மாணவனுக்கு பாராட்டு", தி.மு.க., அயலக அணி. குவைத் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் நிர்வாகிகள் நேரில் சென்று வாழ்த்தினர்.

தமிழன் எங்கு இருப்பினும் தமிழனே, தமிழனோடு கரம் கோர்ப்பது திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே எனும் தமிழகத்தின் முன்னாள் முதல்வர், திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின், எதிர்க் கட்சித் தலைவர், இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைப்படி,

கழக அயலக அணியின் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா மு.எம்.பி ஆகியோரின் வழிகாட்டுதலின்படி இளம் வயதில் சதுரங்க போட்டிகளில் பல சாதனைகள் படைத்து , அபுதாபி சர்வதேச சதுரங்கப் போட்டியில் பல பதக்கங்கள் வென்ற தமிழகத்தை சேர்ந்த குவைத் மாணவர் மித்திலேஷ் ரஞ்சித் குமாரை, தி.மு.க., அயலக அணி குவைத் நிர்வாகிகள் நேரில் சென்று வாழ்த்தினர்.

அபுதாபியில் 2026 ஆகஸ்ட் 15 முதல் 26 வரை நடைபெற்ற 32வது அபுதாபி சர்வதேச சதுரங்க விழாவில் உலகின் சுமார் 80 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்றனர்.

இந்தியாவை பிரதி நிதித்துவப்படுத்தி, தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியைச் சேர்ந்தவரும், தற்போது குவைத்தில் வசித்து வரும் ரஞ்சித் குமார் - சாந்தி தம்பதியரின் மகனுமான மித்திலேஷ் ரஞ்சித்குமார், பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக விளையாடி பதக்கங்கள்,கோப்பைகள் மற்றும் ரொக்கப் பரிசுகளை வென்று சாதனை படைத்துள்ளார்.

குவைத்தில் உள்ள கல்ஃப் இந்தியன் ஸ்கூல் பள்ளியில் கல்வி பயிலும் மித்திலேஷ், இந்தப் புகழ் பெற்ற போட்டியில் 4வது முறையாக பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

அபுதாபியில் நடந்த சதுரங்க போட்டிகளில்

மித்திலேஷ் பெற்ற சாதனைகள்:

ஸ்கூல் U15 பிரிவு - தங்கப் பதக்கம்

ஜூனியர் ஓபன் பிரிவு - வெள்ளிப் பதக்கம்

அகாடமி பிரிவு - வெள்ளிப் பதக்கம் ஓபன் A பிரிவு - 9வது இடம்.

மேலும் பல கோப்பைகள் மற்றும் ரொக்கப் பரிசுகள் பெற்றுள்ளார்

கடந்த ஆண்டு இதே சர்வதேச போட்டியின் ஜூனியர்ஸ் பிரிவில் தங்கப் பதக்கம் வென்று சாம்பியன் பட்டம் பெற்ற மித்திலேஷ், இந்த ஆண்டும் தனது திறமையை நிரூபித்து தொடர்ச்சியான வெற்றிகளைப் பதிவு செய்துள்ளார்.

கடந்த ஆண்டு சாம்பியன் பட்டம் பெற்ற மித்திலேஷ் ஐ பாராட்டி தி.மு.க. அயலக அணி குவைத் சார்பில் "இளம் சாதனையாளர்" விருது வழங்கியது குறிப்பிடத்தக்கது.

இளம் வயதிலேயே சர்வதேச அளவில் சாதனைகள் படைத்து வரும் மித்திலேஷ் ரஞ்சித்குமார், இந்தியா, தமிழ்நாடு மற்றும் குவைத் தமிழ் சமூகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

இந்த செய்தியறிந்த குவைத்தில் உள்ள தி.மு.க. அயலக அணியின் நிர்வாகிகள் குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, துணைச் செயலாளர் மருதூர் ம.பிரேம்குமார்,


தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் மேட்டுவிளை ஐ.ஜானவாஸ், தொண்டரணி துணைச் செயலாளர் உடையார்பாளையம் எஸ். செந்தில்குமார் ஆகியோர் நேரில் சென்று அவரை வாழ்த்தி மகிழ்ந்தனர்.

மேலும் அவர் முன்னெடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் தி.மு.க. துணை நிற்கும் என உறுதி அளித்தனர். கழக நிர்வாகிகள் நேரில் சென்று வாழ்த்தியது இந்த மாணவனுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளித்தது. மேலும் அவரின் பெற்றோர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

### தந்தை பெரியார் 148வது பிறந்த நாள்!

# கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை 8.30 மணிக்கு அண்ணா சாலை, சிம்சன் அருகே அமைந்துள்ள தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கிறார்!

## சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் 148வது பிறந்த நாளை முன்னிட்டு 17.9.2026 அன்று காலை 8.30 மணிக்கு அண்ணா சாலை, சிம்சன் அருகே உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாண்புமிகு கழகத் தலைவர் தளபதி **மு.க.ஸ்டாலின்**, பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் **டி.ஆர்.பாலு மற்றும் முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள்** உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**

நாள்: 12.09.2026

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் – செங்கல்பட்டில்

# முதல்வர் விஜய்யை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்! 5 ஆயிரம் பேர் திரண்டனர்!

## மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் தலைமை! கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு சிறப்புரை!

காஞ்சிபுரம், செப். 13-

சட்டமன்றத்தில் முதல்வர் விஜயின் அடாவடி – ஆணவப் பேச்சைக் கண்டித்து செங்கல்பட்டில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் கலந்துகொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள். முடிவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு கண்டன உரையாற்றினார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மிகவும் அருவெறுக்கத்தக்க வகையில் சட்டமன்ற மாண்புகளை மீறி, மறைந்த தலைவர்களை களங்கப்படுத்தும் வகையில் பேசிய முதல்வர் விஜயின் அடாவடி – ஆணவப் பேச்சைக் கண்டித்து செங்கல்பட்டு, பழைய பேருந்து நிலையம் அருகில் மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் – முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு கண்டன உரையாற்றினார்.

செங்கல்பட்டு நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எல்.இதயவர்மன், வி.என்.பி.வெங்கட்ராமன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் பி.டி.சி.ஜி.செல்வராஜ், இரா.பொன்னுராம், ஆதிமாறன், அ.தமிழ்மாறன், என்.நவீன், சாய்ஜெய்காந்த் பாரதி, ஆர்.எஸ்.கிருத்திகா தேவி, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி, ந.கோபால், ஏ.வந்தேமாதரம், ஆப்பூர் பி.சந்தானம், ஜி.கே.ரவி, எம்.டி.லோகநாதன், திருமுடிவாக்கம் இ.மணி, கே.பி.ராஜன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், டி.பாபு, எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், ஆர்.சதீஷ்குமார், த.வினோத்குமார், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ்,

பகுதி கழகச் செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த. ஜெயக்குமார், பெருங்களத்தூர் எஸ்.சேகர், எஸ்.இந்திரன், டி.காமராஜ், மாடம்பாக்கம் ஆ.நடராஜன், ஏ.கே.கருணாகரன், இரா.சுரேஷ், இ.எஸ்.பெர்னாட்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்பிராகிம், ஆர்.டி.பூபாலன், எம்.ஆர்.சீனிவாசன், ஆர்.எஸ்.சங்கர், க.தேவேந்திரன், எஸ்.சதீஷ், கே.எத்திராஜ், எம்.செல்வகுமார், மா.கணேஷ்பாபு, சே.அருள்தேவி, இரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு மற்றும் எம்.கஜனா (எ) கஜேந்திரன், துரை சண்முக மணிகண்டன், மனோகரி சண்முகம்

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், தையூர் வீ.விஜயகுமார், கோ.ஜானகிராமன், உதயா கருணாகரன், எஸ்.ஆல்பர்ட், ஜா.செந்தில்தேவராஜ், பா.ஞானபிரகாசம், சசிகலா, பொன்.ரமேஷ்கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், கே.ஆர்.ஆனந்தன், தி.க.பாஸ்கரன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், முகலி வாக்கம் தங்கம் வாட்ஸ், ஆர்.ஆர்.ஜெயராம்மார்த்தாண்டம், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ. சத்திய பிரபு உள்ளிட்ட கழகத்தினர் இக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று சிறப்பித்தனர்.

# மாதவரம் வடக்குப் பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

## புழல் எம். நாராயணன் வேண்டுகோள்!

மாதவரம், செப். 13-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக ஆலோசனைக் கூட்டம் கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி பகுதி மற்றும் வார்டு வரையறை குறித்து நடைபெறுகிறது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக ஆலோசனை கூட்டம் நாளை (14.9.2026 - திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு 19 வது வட்டம் மாத்தூர் எம் எம் டி ஏ முதல் பிரதான சாலையில் அமைந்துள்ள சுவாதி மஹால் மஹால் மண்டபத்தில் பகுதி அவைத்தலைவர் வி. திராவிட வீரன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக ஆணைப்படி மாதவரம் வடக்கு பகுதி மற்றும் வார்டுகள் மறு வரையறை, கழக முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் மாதவரம் வடக்கு பகுதிக்குட்பட்ட மாவட்ட, பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பாகமுகவர்கள், பாக உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர்

# பி.ஆனந்தராஜ் இல்லத் திருமண வரவேற்பு விழா!

## எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் - டி.ஜெ.கோவிந்தராஜன் - கி.வே.ஆனந்தகுமார் வாழ்த்துரை!

திருவள்ளூர், செப். 13-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் பி.ஆனந்தராஜ் மகள் ஏ.பி. மகாலட்சமி எஸ்.அப்பு இவர்களின் திருமண வரவேற்பு விழா எல்லாபுரம் ஒன்றியம் ஆத்துபாக்கம் வைஜயந்தி மஹால் திருமண மண்டபத்தில் இன்று (13.09.2026 - ஞாயிற்றுகிழமை) மாலை 6.00 மணியளவில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் தலைமை வகிக்கிறார். மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷராஜ், கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய செயலாளர் கி.வே.ஆனந்தகுமார் முன்னிலை வகிக்கின்றனர்.


மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன, ஜெ.மூரத்தி, எம்.எல்.ரவி, மு.கதிரவன், கே.வி.உமாமகேஸ்வரி, எஸ்.ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், பி.வெங்கடாசலபதி, பரிமளம் நிர்வாகிகள் விஸ்வநாதன், மாநில செயலாளர்கள் சி.எச்.சேகர், வெ. அன்புவாணன், ஒன்றிய மு.மணிபாலன், ஆ. சத்தியவேல், நா.செல்வசேகரன், கா.சு.ஜெகதீசன், ஜான் (எ) பொன்னுசாமி, ஏ.ஆர்.டி. உதயசூரியன், முரளிதரன், இரா.அறிவழகன், ஜி.ரவிகுமார், பி.முத்து, க.சு.தமிழ்உதயன், நா.மோகன்ராஜ், கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் என்.எஸ்.மூரத்தி, ஜெ.சுரேஷகுமார், கே.இ.திருமலை, வி.துர்காதேவி வெங்கடேசன், புலியூர்.புருஷோத்தமன், கே.ஜி.நமச்சிவாயம், இ.பிரபு, எம்.கேசவன், அணிகளின் நிர்வாகிகள் கே.வி.லோகேஷ், வெற்றி (எ) ராஜேஷ், வழக்கறிஞர். டி.ஜெ.டி.தினேஷ், வி.பி. ரவிகுமார், என். கிருஷ்ணமூர்த்தி, கே.ஆறுமுகம் க.சம்பத், எஸ்.சுமன், ரோஸ்பொன்னையன், மு.பாஸ்கர், ஜி.பி.வெங்கடேன், எம்.ஆர்.ஸ்ரீதர், டி.ஜெ.ஜி.தமிழரசன், எஸ்.ராமஜெயம், டி.சங்கர், தில்லை குமார், ஜெ.பிரதாப், பி.சுரேஷ், ஜோதி, அப்துல்கரீம், கோல்டு. மணி, ஏ.சீனிவாசன், ஜெ. முனுசாமி, கே.வி.நாகராஜ், கே.எஸ்.சதீஷ்குமார், கே.வி. ரவி, டி.ரவி பா.பரத்குமார்,

மாவட்ட தொண்டர் அணி நிர்வாகிகள் டி.ஜெகன், இ.ஜி.பார்த்திபன், தியாகராஜன், மோகன், இளங்கோ, எம்.எஸ்.முத்துகுமார், நாகராஜ், சஞ்சய் காந்தி, திருப்பதி, மாரிமுத்து, எம்.தேவராஜ், ஏ.யுகேந்திரன், இரா.அப்புன், கோதண்டன், ஜெ. என்.பாண்டியன், இ.எம். ராஜேஷ், எஸ்.இளம்புயல்நவீன், பார்த்தசாரதி மற்றும் கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய கிளை நிர்வாகி கள் மணமக்களை வாழ்த்துகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.எஸ்.ராஜபூசனம்

### செப்டம்பர் 13 (2021)



தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தின் இணைந்து பணியாற்றியவர்.

சென்னை, ஆயிரம்விளக்கு பகுதி பிரதிநிதி, பகுதி துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.

42 ஆண்டுகாலமாக இராசாங்கம் நினைவு மன்றத்தின் தலைவராக பொறுப்பு வகித்து அப்பகுதி மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் செய்தவர்.

வருமானவரித் துறை ஊழியர் கூட்டமைப்பின் தலைவர், தமிழ்நாடு தொழிற்சங்க தலைவராக பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### லேனா (எ) இரா. இலக்குமணன்

### செப்டம்பர் 13 (1998)



கழகம் தொடங்கிய காலந்தொட்டு உறுப்பினராகி, சுமார் நாற்பது ஆண்டு காலமாக தனது பகுதியில் கழக வளர்ச்சிக்காக பாடுபட்டவர்.

திருத்துறைப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக ஒரு முறையும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றதோடு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று ஆறு மாத சிறைவாசம் அனுபவித்தார். மொழிப்போர் தியாகி என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.